நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மணப்பாறை.
முன்னிலை: திரு. இரா. அசோக்குமார் **B.Com, B.L .,**
நீதித்துறை நடுவர், மணப்பாறை,
2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 01–ம் நாள் புதன்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.272/2025

(CNR NO.TNTP100027312025

**சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்**

.....

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | தமிழ்நாடு அரசு,<br>அதற்காக காவல் ஆய்வாளர்,<br>மணப்பாறை காவல் நிலையம்,<br>குற்ற எண்.485/2025 |
| குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள்: | கண்ணுச்சாமி (எ) ராஜா,<br>த/பெ. பெரியசீலன் |
| குற்றப்பிரிவு | U/s.304(2) BNS |
| வனையப்பட்டது | U/s.304(2) BNS |
| தீர்மானம் | முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவு U/s.304(2)BNS–ன் கீழான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து (குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் 248(1)) சட்டப்பிரிவு U/s.271(1)Bharatiya Nagarik Suraksha Sanhita 2023–ன் கீழ் அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

| குற்றம் சாட்டப்பட்டவர்கள் விபரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | த.பெ. / க.பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
| கண்ணுச்சாமி (எ) ராஜா, | பெரியசீலன் | இந்து | கூலி | எண்.15, சித்திரசீல நாயக்கனூர், தரகம்பட்டி ரோடு, T. இடையபட்டி, கடவூர் வட்டம், கரூர் மாவட்டம். | 39/ 2025 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| குற்ற நிகழ்வு நாள் | : | 29.07.2025 |
| புகார் கொடுத்த நாள் | : | 30.07.2025 |
| எதிரிகளை கைது செய்த நாள் | : | 31.07.2025 |
| பிணை விடுவிப்பு | : | (The Hon'ble Madurai Bench of Madras High Court Bail order in CRL OP(MD).No.14342 of 2025) Releaded On Bail 01.09.2025 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 20.11.2025 |
| விசாரணை முடிவு | : | 04.06.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | – |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 20.08.2025 |
| Date of Questioning | : | 12.11.2025 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | –– |

| | | |
|---|---|---|
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PW's Chief Cross<br><br>PW1 20.11.2025<br>PW2 20.11.2025<br>PW3 07.05.2026 07.05.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 04.06.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்தவிவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| கால தாமதத்திற்கான காரணம் | : | -- |

இவ்வழக்கானது 26.09.2025ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 04.06.2026–ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **திரு. ஆனந்தகுமார் உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்,**எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. K. மாரியப்பன்** அவர்களும், ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

## தீர்ப்புரை

இவ்வழக்கானது புகார்தாரர் Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 சட்டப்பிரிவு 173–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் படி எழுந்த வழக்காகும்.

## 2. குற்ற முறையீட்டின் சுருக்கம்:–

வாதி கடந்த 7 வருடங்களாக மணப்பாறை பஸ் ஸ்டாண்டு எதிரே வெற்றிலை பாக்கு கடை நடத்தி வந்துள்ளதாகவும், கடந்த 29.07.2025ம் தேதி வேலை முடித்து வீட்டிற்கு சென்றுவிட்டு செவ்வாய்கிழமை என்பதால் சர்ச் செல்ல வேண்டி தீராம்பட்டியில் உள்ள அவரது வீட்டிலிருந்து கிளம்பி சந்தனமாதா ஆலயத்திற்கு செல்வதற்காக மஞ்சம்பட்டி புனித அந்தோணியார் துவக்கப்பள்ளி அருகே இரவு 20.30 மணியளவில் பாலத்திற்கு அடியில் சர்வீஸ் ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் நடந்து வந்த எதிரி வாதியின் கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் தங்க செயினை அறுத்துச்சென்றுவிட்டார். எனவே, மேற்படி எதிரியின் குற்றச்செய்கையானது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் சட்டம் 304(2)BNS–ன்படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக மணப்பாறை காவல் நிலைய கால் உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

## 3.வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளிடம் வினவல்:

குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல் U/S.**230 Bharatiya Nagarik Suraksha Sanhita 2023**(கு.வி.மு.ச பிரிவு 207)–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து,

எதிரிகளுக்கு எதிராக பிரிவு **263(1) Bharatiya Nagarik Suraksha Sanhita 2023–ன்** (கு.வி.மு.ச. பிரிவு 240(1))–ன் படி சட்டப்பிரிவு U/s.304(2)BNS–ன்படி குற்றச்சாட்டு வனையப்பட்டு, பிரிவு263(1) Bharatiya Nagarik Suraksha Sanhita 2023 (கு.வி.மு.ச.240(2)) பிரிவின் கீழ் எதிரியிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. விசாரணை:–**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள்–1 குறியீடு செய்யப்பட்டுள்ளத. எதிரி தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :–**

(5.1) அ.சா.1. திருமதி. சகாயராணி என்பவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியும் என்றும், கடந்த 29.07.2025 அன்று இரவு 08.30 மணியளவில் மஞ்சம்பட்டி, புனித அந்தோனியார் துவக்கப்பள்ளி பாலத்தின் அடியில் சர்வீஸ் ரோட்டில் நடந்து கொண்டிருந்தபோது தீடீரென்று ஒரு நபர் எனது கழுத்திலிருந்த 3 பவுன் தங்கசெயினை பறித்து சென்றுவிட்டார் என்றும், இருட்டில் பறித்த சென்ற நபர் யார் என்று தெரியவில்லை என்றும், எதிரியுடன் ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்ததால் சந்தேகத்தின் பெயரில் அவரது பெயரில் புகார் கொடுத்தேன் என்றும், பின்னர் 31.07.2025 ம் தேதி எனது செயின் கிடைத்துவிட்டதாக போலீசார் என்னிடம் தகவல் சொல்லி காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி எனது நகைகளை அடையாளம் காட்ட

சொன்னதன் பெயரில் நான் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் மனுசெய்து எனத நகையை பெற்றுக்கொண்டேன் என்றும், நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2. திரு. சின்னப்பன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அ.சா.1 எனது மகள் என்றும், கடந்த 29.07.2025 அன்று இரவு 08.30 மணியளவில் மஞ்சம்பட்டி, புனித அந்தோனியார் துவக்கப்பள்ளி பாலத்தின் அடியில் சர்வீஸ் ரோட்டில் நடந்து கொண்டிருந்தபோது தீடீரென்று ஒரு நபர் எனது மகளின் கழுத்திலிருந்த 3 பவுன் தங்கசெயினை பறித்து சென்றுவிட்டதாக சொன்னார் என்றும், அதன்பின்னர் எனது மகள் புகார் கொடுத்து களவாடிய செயினை நீதிமன்றத்தில் பெற்றுவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3. திரு. கதிரவன் (காவல் உதவி ஆய்வாளர்) தனது முதல் விசாரணை சாட்சியத்தில் நான் தற்போது மணப்பறை காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 30.07.2025 அன்று இரவு 08.00 மணியளவில் நான் நிலைய பொறுப்பிலிருந்தபோது தீராம்பட்டியை சேர்ந்த சகாயாராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அந்த புகாரின் அடிப்படையில் மணப்பாறை காவல்நிலைய குற்ற எண். 485/2025 u/s.304(2) BNS ன் படி வழக்கு பதிவு செய்தேன் என்றும், தொடர்ந்து இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துகொண்ட நான் 31.07.2025 அன்று காலை 06.00 மணியளவில் சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சிகள் சவரிராயன், வியாகுலராஜ் சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், தொடர்ந்து

சகாயாராணி, சிவக்குமார், சின்னப்பன், வியக்குலராஜ், சவரிராயன் உள்ளிட்ட சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டது உண்மையென தெரியவந்ததால் எதிரியை அன்றைய தினம் அன்று காலை 10.00 மணியளவில் மணப்பாறை பேருந்து நிறுத்தம் அருகே மூன்ஸ்டார் அருகே நின்றுகொண்டிருந்த எதிரி கண்ணுச்சாமியை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஜெயராஜ், மரியஅருள் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து எதிரியிடமும் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கண்ணுச்சாமி கடந்த 29.07.2025 அன்று மாலை கையில் பணம் இல்லாததால் மணப்பாறை பேருந்து நிலையத்திற்கு வந்து மஞ்சம்பட்டி, மாதாகோவில் அருகே ஒரு நபரிடம் பணம் வாங்க சென்றதாகவும் அவர் சொன்னப்படி பணம் தராததால் பணத்தேவையின் அடிப்படையில் மஞ்சம்பட்டி, மாதாகோவில் அருகே நடந்து வந்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணை பின்தொடர்ந்து சென்று அவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை பறித்தாகவும் அந்தப்பெண் தனக்கு தெரிந்த வெற்றிலைபாக்கு கடை வைத்திருப்பதாகவும் கூறிய போது நகையை பறித்துக்கொண்டு அங்கியிருந்து தப்பிச்சென்று இருப்பதாகவும் அந்த நகையை தரங்கம்பட்டியில் உள்ள கொசமற்றம் பைனான்ஸ் நிறுவனத்தில் 3 பவுன் தங்க செயினை ரூபாய் ஒரு லட்சத்திற்கு அடகு வைத்தாகவும், அந்த பணம் அவரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டதாகவும் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதன் அடிப்படையில் தன்னை அழைத்து சென்றால் அவர் அடகு வைத்த நகையை அடையாளம் காட்டுவதாக கூறினார் என்றும், அதன் பெயரில் எதிரி அன்றைய தினம் 12.00

மணியளவில் தரங்கம்பட்டி, கொசமற்றம் பைனான்ஸில் அடகு வைத்திருந்த நகையை சாட்சிகள் ஜெயராஜ், மரியஅருண் ஆகியோர் சகிதமாக எதிரியை அடையாளம் காட்ட 24 கிராம் எடைக்கொண்ட கொக்கி கழன்ற நிலையில் தங்க செயின் ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், தொடர்ந்து எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்டுபடுத்தினேன் என்றும், வழக்கு சொத்தினை படிவம் –91 மூலம் கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்றும், தொடர்ந்து சாட்சிகள் இளவரசன், மணிகண்டன் உள்ளிட்டவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இவ்வாறாக புலன் விசாரணை முடித்து கடந்த 20.08.2025 அன்று எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6. குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமான தோன்றிய விஷயங்கள் குறித்து (குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு.313(1)(b))சட்டப்பிரிவு **Bharatiya Nagarik Suraksha Sanhita 2023–ன்** U/s.351(1)பிரிவின்படி கேள்விகள் கேட்க எதிரி தரப்பில் சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி வேறு ஏதாவது கூற வேண்டுமா என்று வினவிய போது பொய் வழக்கு என்றும், எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவிய போது சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். பின்பு எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை இல்லை என்று குறிப்புரை செய்ததன் பெயரில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:-**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் U/s. 304(2) BNS-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**8. தீர்வு:-**

(8.1). அ.சா.1. திருமதி. சகாயராணி என்பவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 29.07.2025 அன்று இரவு 08.30 மணியளவில் மஞ்சம்பட்டி, புனித அந்தோனியார் துவக்கப்பள்ளி பாலத்தின் அடியில் சர்வீஸ் ரோட்டில் நடந்து கொண்டிருந்தபோது தீடீரென்று ஒரு நபர் எனது கழுத்திலிருந்த 3 பவுன் தங்கசெயினை பறித்து சென்றுவிட்டார். இருட்டில் பறித்த சென்ற நபர் யார் என்று தெரியவில்லை. எதிரியுடன் ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்ததால் சந்தேகத்தின் பெயரில் அவரது பெயரில் புகார் கொடுத்தேன். அ.சா.ஆ.1.என்றுமுதல்விசாரணையில் புகார்தாரர் சாட்சியளித்துள்ளார். மேற்படி சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரிக்காததால் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். அவர் முற்றிலுமாக பிறழ்சாட்சியாகிவிட்டதால் அவரது சாட்சியமானது நம்பத்தகுந்ததாக இல்லை.

(8.2). அ.சா.2. திரு. சின்னப்பன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அ.சா.1 எனது மகள். கடந்த 29.07.2025 அன்று இரவு 08.30 மணியளவில் மஞ்சம்பட்டி, புனித அந்தோனியார் துவக்கப்பள்ளி பாலத்தின் அடியில் சர்வீஸ் ரோட்டில் நடந்து கொண்டிருந்தபோது தீடீரென்று ஒரு நபர் எனது மகளின் கழுத்திலிருந்த 3 பவுன் தங்கசெயினை பறித்து சென்றுவிட்டதாக சொன்னார்.

(8.3). மேலும் புகார்தாரரே பிறழ் சாட்சியாகிவிட்டதால் மற்ற சாட்சிகளை விசாரிக்க தேவையில்லை என்று அரசு தரப்பே தாமாகமுன்வந்து மற்ற சாட்சிகளை விசாரிக்கவில்லை என்று ஒப்புக்கொண்டு மேற்குறிப்பு செய்துள்ளனர் ஆதலால் அவர்களை விசாரணை செய்யாமல் உள்ளது.

(8.4) அரசு தரப்பில் இறுதியாக அ.சா.3. திரு. கதிரவன் (காவல் உதவி ஆய்வாளர்) தனது முதல் விசாரணை சாட்சியத்தில் நான் தற்போது மணப்பறை காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.07.2025 அன்று இரவு 08.00 மணியளவில் நான் நிலைய பொறுப்பிலிருந்தபோது தீராம்பட்டியை சேர்ந்த சகாயாராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அந்த புகாரின் அடிப்படையில் மணப்பாறை காவல்நிலைய குற்ற எண்.485/2025 u/s.304(2) BNS–ன்படி வழக்கு பதிவு செய்தேன் என்றும், தொடர்ந்து இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துகொண்ட நான் 31.07.2025 அன்று காலை 06.00 மணியளவில் சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சிகள் சவரிராயன், வியாகுலராஜ் சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், தொடர்ந்து சகாயாராணி, சிவக்குமார், சின்னப்பன், வியக்குலராஜ், சவரிராயன் உள்ளிட்ட சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டது உண்மையென தெரியவந்ததால் எதிரியை அன்றைய தினம் அன்று காலை 10.00 மணியளவில் மணப்பாறை பேருந்து நிறுத்தம் அருகே மூன்ஸ்டார் அருகே நின்றுகொண்டிருந்த எதிரி கண்ணுச்சாமியை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்யப்பட்டது

குறித்தும், அவரது அரசுதரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள் கைப்பற்றப்பட்டது மற்றும் கைப்பற்றப்படும்பொழுது விசாரித்து சாட்சிகள் பெறப்பட்டது குறித்தும், எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

(8.5) ஆனால் அவரது சாட்சியத்தினை ஒத்துரைக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் புகார்தாரரே தனக்கும் எதிரிக்கும் எந்ததொடர்பும் இல்லை என்றும், எதிரியுடன் ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்ததால் சந்தேகத்தின் பெயரில் அவரது பெயரில் புகார் கொடுத்தேன் என்றும், புகார்தாரரான அ.சா.1 சாட்சியமளித்துள்ளார். எனவே, இந்நிலையில் அ.சா.3 ன் சாட்சியத்தினை வைத்து மட்டும் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்க போதுமானதாக எடுத்துக்கொள்ள இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

(8.6) எனவே, மேற்படி அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை முழுமையாக பரிசீலனை செய்ததில் எதிரிகளுக்கும், மேற்படி வழக்கிற்கும் எந்தவித தொடர்பும் இருப்பது கூறி எந்தவித சாட்சிகளும் இல்லாமல் இருப்பதால் எதிரிகளுக்கு எதிராக மேற்படி குற்றம் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை.

**முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவு U/s.304(2)BNS–ன் கீழான குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து (குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் 248(1)) சட்டப்பிரிவு U/s.271(1)Bharatiya Nagarik Suraksha Sanhita 2023–ன் கீழ் அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

9. இந்த வழக்கில் வழக்கு சொத்துக்கள் RP.No.93/2025 கண்ட சா.பொ.1 – 24 கிராம் எடை கொண்ட (3 பவுன்) கொக்கி கழன்ற நிலையில் உள்ள தங்கச்செயின் – 1 ஐ CRLMP No.902/2025, Dated: 12.08.2025 உத்தரவின் பிரகாரம் புகார்தாரர் பெற்றுக்கொண்டுள்ளார். அதனை அவரே வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. எதிரிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 01 நாள் அவை அறிய பகரப்பட்டது.

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.07.01 16:33:38 +0530

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

**இணைப்பு:**
**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1. | : | திருமதி. சகாயராணி |
| அ.சா.2. | : | திரு. சின்னப்பன் |
| அ.சா.3 | : | திரு. கதிரவன் (காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | : | புகார் மனு |
| அ.சா.ஆ.2. | : | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3. | : | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | : | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | : | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 | : | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7 | : | படிவம் –91 |

**<u>அரசு தரப்பில் சான்று பொருட்கள்</u>:**

சா.பொ.1 – 24 கிராம் எடை கொண்ட (3 பவுன்) கொக்கி கழன்ற நிலையில் உள்ள தங்கச்செயின் – 1

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை</u>**

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.07.01 16:33:47 +0530

நீதித்துறை நடுவர்
மணப்பாறை.

**<u>பின்குறிப்பு:–</u>**

1) வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2) எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.